## டிசம்பர் – 06 – புதன்

**புனித நிக்கோலஸ்**

**ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.**

**திபா. 23:1**

### முதல் வாசகம் : ஏசாயா 25 : 6 – 10

படைகளின் ஆண்டவர் இந்த மலையில் மக்களினங்கள் அனைவருக்கும் சிறந்ததொரு விருந்தை ஏற்பாடு செய்வார். அதில் சுவைமிக்க பண்டங்களும், பழரசப் பானமும், கொழுப்பான இறைச்சித் துண்டுகளும், வடிகட்டிப் பக்குவப்படுத்திய திராட்சை இரசமும் பரிமாறப்படும். மக்களினங்கள் அனைவரின் முகத்தை மூடியுள்ள முக்காட்டை இந்த மலையில் அவர் அகற்றிவிடுவார் பிற இனத்தார் அனைவரின் துன்பத் திகிலைத் தூக்கி எறிவார். என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்துவிடுவார். என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார். தம்மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றிவிடுவார் ஏனெனில், ஆண்டவரே இதை உரைத்தார். அந்நாளில் அவர்கள் சொல்வார்கள் இவரே நம் கடவுள் இவருக்கென்றே நாம் காத்திருந்தோம் இவர் நம்மை விடுவிப்பார் இவரே ஆண்டவர் இவருக்காகவே நாம் காத்திருந் தோம் இவர் தரும் மீட்பில் நாம் மகிழ்ந்து அக்களிப்போம். ஆண்டவரின் ஆற்றல் இம்மலையில் தங்கியிருக்கும் எருக்குழி நீரில் வைக்கோல் மிதிக்கப்படுவதுபோல், மோவாபு அவரால் மிதிக்கப்படுவான்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் இல்லத்தில் நான் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்

### நற்செய்தி : மத்தேயு 15 : 29 - 37

அக்காலத்தில் இயேசு அவ்விடத்தை விட்டு அகன்று கலிலேயக் கடற்கரை வழியாகச் சென்று அங்கே ஒரு மலையின் மீது ஏறி அமர்ந்தார். அப்பொழுது பெருந்திரளான மக்கள் அவரிடம் வந்தனர். அவர்கள் தங்களோடு கால் ஊனமுற்றோர், பார்வை யற்றோர், உடல் ஊனமுற்றோர், பேச்சற்றோர், மற்றும் பிற நோயாளர் பலரையும் அவர் காலடியில் கொண்டுவந்து சேர்த்தனர். அவர்களை அவர் குணமாக்கினார். பேச்சற்றோர் பேசுவதையும் உடல் ஊனமுற்றோர் நலமடைவதையும் பார்வையற்றோர் பார்க்கிறதையும் கண்டு மக்கள் கூட்டத்தினர் வியந்து இஸ்ரயேலின் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர். இயேசு தம் சீடரை வரவழைத்து, "நான் இம்மக்கள் கூட்டத்தின்மீது பரிவு கொள்கிறேன். ஏற்கனவே மூன்று நாள்களாக இவர்கள் என்னுடன் இருக்கிறார்கள். உண்பதற்கும் இவர்களிடம் எதுவும் இல்லை. இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிடவும் நான் விரும்பவில்லை. அனுப்பினால் வழியில் தளர்ச்சி அடைந்து விடலாம்" என்று கூறினார். அதற்குச் சீடர்கள் அவரிடம், "இவ்வளவு திரளான மக்களுக்கு அளிக்கப் போதுமான உணவு நமக்குப் பாலை நிலத்தில் எங்கிருந்து கிடைக்கும்?" என்று கேட்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, "உங்களிடம் எத்தனை அப்பங்கள் உள்ளன?" என்று கேட்டார். அவர்கள், "ஏழு அப்பங்கள் உள்ளன. சில மீன்களும் இருக்கின்றன" என்றார்கள். தரையில் அமருமாறு மக்களுக்கு அவர் கட்டளையிட்டார். பின்பு அந்த ஏழு அப்பங்க ளையும் மீன்களையும் எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, பிட்டு, சீடர்களிடம் கொடுக்க, அவர்களும் மக்களுக்குக் கொடுத்தார்கள். அனைவரும் வயிறார உண்டனர். மீதியாய் இருந்த துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தனர்.

**தியானம்:** எம்மீது பரிவிரக்கம் கொண்ட இறைமகன் இயேசுக்கிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலானவர். அவருக்கு எல்லாமே "இலேசான காரியம்". ஏனெனில் அவர் "ஏழு அப்பங்களையும் சில மீன்களையும்" கொண்டு பெருந்திரளான மக்கள் கூட்டத்திற்கு வயிறார உணவளிப்பதிலும் மேலான செயல்கள் புரிவதற்கும் வல்லமை உடையவர். இதற்கமைவாக ஒவ்வொரு தடவையும் அப்பத்தின் வடிவில் பரிசுத்த திவ்விய நற்கருணையின் வழியாக அவரை நாம் பெற்றுக் கொள்ளும்போது எமது தேவைகள் ஒவ்வொன்றிலும் பரிபூரணமாக திருப்தியடைய வேண்டுமென அவர் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். ஒவ்வொரு திருப்பலியிலும் நாம் இறைமகன் கிறிஸ்து இயேசுவின் கடைசி இராப்போசன விருந்தினை நினைவு கூர்வது மட்டுமல்ல, அவர் திருச்சிலுவையில் பெற்றுக்கொண்ட மாபெரும் வெற்றியையும் கொண்டாடுகின்றோம். அவர் சிலுவையிலே மரணமடையாவிட்டால் எமக்காக பாவத்தினை வென்றிருக்க முடியாது. ஒவ்வொரு தடவையும் நாம் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது இறைமகன் கிறிஸ்து இயேசு எமக்கு மாபெரும் விருந்தொன்றை வழங்குகின்றார் (ஏசாயா 25:6). ஆதலால் பாவத்தின் மீது இறைமகன் கிறிஸ்து கொண்ட வெற்றியினை நாம் கொண்டாடும் போது நம் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை அகற்றிவிடுகின்றார் (ஏசாயா25:8). இறைமகன் இயேசுவின் திருவிருந்தில் பங்குபெறுவது எமக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். எமது பயம், கவலை, கண்ணீர், துன்பம் அனைத்தையும் நீக்கும் வல்லமை பெற்ற அவ்விருந்தில் நாம் எந்நேரமும் பங்குபெறவேண்டும். எனினும், நாம் அதற்கான வாஞ்சையோடும், ஆவலோடும் அதேவேளையில் ஆயத்த நிலையிலும் இருக்கவேண்டும். அதன் மூலம் இறைமகன் இயேசுவை சுவைத்துப் பார்க்கும் அனுபவத்தினைப் பெற்றிடும் பாக்கியசாலிகளாக மாற்றமடைந்திடுவோம். மண்ணுலக மாந்தரெல்லாம் விண்ணரசைப் புரிந்து கொள்ள மந்தை மேய் மனிதருக்கு நற்செய்தி அறிவித்தவரே நான் உம்மை ஆராதிக்கின்றேன் - ஆமென்